# GCE 'O' LEVEL GUIDE (FOR ORDINARY AND HIGHER TAMIL)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| A | **GENERAL (பொது)** | |
| 1 | GCE 'O' LEVEL EXAM PAPER FORMAT - MT AND HTL (DURATION AND MARKS)<br><br>GCE சாதாரண நிலை (உயர்நிலை 1 to 4) தேர்வு விவர அட்டவணை - தமிழ் மற்றும் உயர்தமிழ் (கால அளவு & மதிப்பெண்கள்) | 1 - 4 |
| B | **PAPER 1 ESSAY WRITING AND EMAIL**<br><br>**தாள் 1 (கட்டுரை மற்றும் மின்னஞ்சல்)** | |
| 2 | TYPES OF EMAILS, FORMAT AND TIPS ON HOW TO APPROACH THEM FOR BEST RESULTS<br><br>மின்னஞ்சல் வகைகள், அமைப்புமுறை மற்றும் அவற்றில் சிறப்புத் தேர்ச்சிக்கான அணுகுமுறைகள் | 5 - 7 |
| 3 | TYPES OF ESSAYS AND EXPLANATIONS<br><br>கட்டுரை வகைகளும் அவற்றுக்கான விளக்கங்களும் | 8 - 8 |
| 4 | STRUCTURE AND TIPS ON ESSAY WRITING<br><br>கட்டுரை எழுதுவதற்கான அமைப்பு முறைகள் மற்றும் உதவிக் குறிப்புகள் | 9 - 13 |
| C | **PAPER 2 COMPREHENSION & USAGE OF LANGUAGE**<br><br>**தாள் 2 (கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்)** | |
| 5 | MARABHUTHODARGAL / INAIMOZHIGAL FROM MOE SYLLABUS - Sec 1 to Sec 4 With Meanings & Example Sentences<br><br>மரபுத்தொடர்கள் / இணைமொழிகள் - Sec 1 to Sec 4<br><br>கல்வி அமைச்சுப் பாடத்திட்டத்தில் அமைந்துள்ள மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் - பொருளும் & எடுத்துக்காட்டு வாக்கியங்களுடன் | 14 - 31 |
| 6 | SENTENCE STRUCTURE - QUESTIONS BASED ON GCE 'O' LEVEL FORMAT - TYPES, GUIDELINES ON HOW TO APPROACH THEM<br><br>வாக்கியத்தை முடித்தெழுதுதல் - சாதாரண நிலைத் தேர்வுமுறையில் அமைக்கப்பெற்ற வாக்கிய அமைப்பு வகைகள் மற்றும் அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டு வாக்கியங்களுடன் | 32 - 35 |


WORDSMITH
BEYOND LEARNING

| | | |
|---|---|---|
| 7 | OPEN - ENDED COMPREHENSION - QUESTIONS ASKED IN O - LEVEL EXAM FORMAT, TYPES, EXPLANATIONS AND APPROACHES<br>சுயவிடைக் கருத்தறிதல் - சாதாரண நிலைத் தேர்வுமுறையில் அமைக்கப்பெற்ற வினா வகைகள், அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டுகளுடன் | 36 - 37 |
| **D** | **ORAL AND LISTENING (வாய்மொழி மற்றும் கேட்டல் கருத்தறிதல்)** | |
| 8 | READING ALOUD - GUIDELINES AND MODEL EXERCISES<br>வாய்விட்டு வாசித்தல் - வழிகாட்டுக் குறிப்புகள் மற்றும் மாதிரிப் பயிற்சிகள் | 38 - 44 |
| 9 | TOPIC DISCUSSION / LISTENING COMPREHENSION - GUIDELINES<br>தலைப்பையொட்டிய கலந்துரையாடல் / கேட்டல் கருத்தறிதல் - வழிகாட்டும் குறிப்புகள் | 45 - 46 |
| **E** | **EXERCISES FOR HTL (உயர் தமிழுக்கான பயிற்சிகள்)** | |
| 10 | GCE 'O' LEVEL HTL FORMAT - ERROR CORRECTION, MERGING WORDS, SUMMARY WRITING EXERCISES<br>சாதாரண நிலை உயர்தமிழ்த் தேர்வு அடிப்படையில் அமைந்த பிழை திருத்தம், சொற்புணர்ச்சி, சுருக்கி வரைதல் பயிற்சிகள் | 47 - 66 |
| **F** | **TO USE IN COMPOSITION AND ORAL DISCUSSION**<br>**(கட்டுரையிலும் உரையாடலிலும் பயன்படுத்த)** | |
| 11 | 60 BEST EXAM TOPICS THIRUKKURAL AND PALAMOZHIGAL<br>60 சிறந்த தேர்வுக்குரிய தலைப்புகளில் திருக்குறள் மற்றும் பழமொழிகள் | 67 - 85 |
| 12 | 100 USEFUL BEST QUOTES AND PROVERBS<br>100 பயனுள்ள சிறந்த மேற்கோள்கள் & பொன்மொழிகள் | 86 - 93 |
| 13 | 100 IMPORTANT EXAM BASED INIYA THODARGAL<br>100 முக்கிய தேர்வுக்கு உதவும் இனிய தொடர்கள் | 94 - 100 |
| 14 | 50 BEST SONG LYRICS SUITABLE FOR ESSAY WRITING<br>50 தலைசிறந்த திரைப்படப் பாடல் வரிகள் கட்டுரைகளில் பயன்படுத்த | 101 - 104 |
| 15 | 30 MARABHUTHODARGAL, 30 INAIMOZHIGAL, 30 UVAMAITHODARGAL APART FROM SYLLABUS<br>30 மரபுத்தொடர்கள், 30 இணைமொழிகள், 30 உவமைத்தொடர்கள் - பாடத் திட்டத்தில் அல்லாதவை | 105 - 114 |


WORDSMITH BEYOND LEARNING

| | | |
|---|---|---|
| **G** | **VOCABULARY**<br><br>**(மொழிவளம்)** | |
| 16 | 500 BEST WORDS WITH MEANING (TAMIL - TAMIL)<br><br>500 சிறந்த சொற்பொருள்கள் (தமிழ் - தமிழ்) | 115 - 131 |
| 17 | 20 BEST EXAM BASED ORAL TOPIC DISCUSSION AND ESSAY WRITING (CONTENT VOCABULARY) - (ENGLISH TO TAMIL)<br><br>20 சிறந்த தேர்வுக்குரிய தலைப்புகளில் கருப்பொருள் சார்ந்த சொல்வளம் - வாய்மொழிக் கலந்துரையாடல் மற்றும் கட்டுரையில் பயன்படுத்தக்கூடியவை (ஆங்கிலம் - தமிழ்) | 132 - 148 |
| 18 | 50 BEST WORDS - USED TO EXPLAIN THE SAME MEANING IN DIFFERENT CONTEXT<br><br>50 சிறந்த ஒரே பொருளை விளக்கும் சூழலுக்கேற்ற சொற்கள் - தேர்வுக்குரிய தலைப்புகளில் | 149 - 157 |
| **H** | **OTHERS (மற்றவை)** | |
| 19 | IN EXAM - DO'S AND DON'TS<br><br>தேர்வில் - செய்யக்கூடியவை & செய்யக்கூடாதவை | 158 - 158 |
| 20 | TIMING OF EXAM<br><br>தேர்வுக் கால விவரங்கள் | 159 - 159 |
| 21 | ANSWER KEY<br><br>விடைக்குறிப்புகள் | 161 - 165 |

## A1. GCE 'O' LEVEL EXAM PAPER FORMAT (SEC 1 - SEC 4) - MT AND HTL (DURATION AND MARKS)

GCE சாதாரண நிலை (உயர்நிலை 1 to 4) தேர்வு விவர அட்டவணை - தமிழ் மற்றும் உயர்தமிழ் கால அளவு & மதிப்பெண்கள்

### SKILLS ASSESSED

- Oral (Reading aloud, Topic Discussion)
- Writing
- Language Use
- Reading

| EXAM FORMAT (MT) | | |
|---|---|---|
| **Component** | **Duration** | **Marks** |
| Paper 1<br>Compo and Email writing | 2 hrs | 60 m |
| Paper 2<br>Language Use | 1 h 30 min | 70 m |
| Paper 3<br>Oral | Reading<br>Discussion<br>10 min for silent reading and to prepare for conversation | 10 m<br>40 m |
| Listening Comprehension | Approx 30 min | 20 m |

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

| EXAM FORMAT (Higher MT) | | |
|---|---|---|
| **Component** | **Duration** | **Marks** |
| Paper 1<br>Compo and<br>email / forum debate / blog | 2 hrs | 80 m |
| Paper 2 - Language Use | 1 hr 45 mins | 80 m |
| Paper 3 - Oral | Discussion 1<br>Discussion 2<br>10 min to prepare for oral presentation and discussion on given topic | 40 m |

## ➢ PAPER 1

### EMAIL WRITING (20 marks)

- Choose 1 from 2 given questions. (110 words)

### ESSAY WRITING (40 marks)

- Choose 1 from 3 given questions. (200 words)

## ➢ PAPER 2 (LANGUAGE USE) - 70 marks

1. மரபுத்தொடர் / இணைமொழி (5x2m = 10m)
2. வாக்கியத்தை முடித்தெழுதுதல் (5x2m = 10m)
3. அமைப்புச் சொற்கள் (5x2m = 10m)
4. தெரிவுவிடைக் கருத்தறிதல் (5x2m = 10m)
5. சுயவிடைக் கருத்தறிதல் 5 Questions (25m)
6. சொற்பொருள் (5x1m = 5m)

WORDSMITH
BEYOND LEARNING

- **PAPER 3 ORAL (50 marks)**
    - Reading Aloud (10 marks)
    - Conversation (40 marks)

- **LISTENING COMPREHENSION (20 marks)**
    - About 6 short passages, 10 questions to answer

**HIGHER MOTHER TONGUE COMPONENTS -**

**PAPER 1**

- **EMAIL WRITING / FORUM DEBATE / BLOGS (20 marks)**

Choose 1 from 2 given questions. (130 words)

- **ESSAY / COMPO WRITING (60 marks)**
    - Choose 1 from 3 given questions. (300 words)

- **PAPER 2 (LANGUAGE USE) - 80 marks**

| | | |
|---|---|---|
| 1. | முன்னுணர்வுக் கருத்தறிதல் | (5x2m = 10m) |
| 2. | பிழைத்திருத்தம் | (5x2m = 10m) |
| 3. | சொற்புணர்ச்சி | (5x2m = 10m) |
| 4. | கருத்தறிதல் & பொருள் எழுதுதல் | 5 Questions (22m) |
| 5. | சுயவிடைக் கருத்தறிதல் | 4 Questions (16m) |
| 6. | சுருக்கி வரைதல் | 1 Question (12m) |

- **PAPER 3 ORAL (40 marks)**
    - Conversation 1 (20 marks)
    - Conversation 2 (20 marks)

# GRADING SYSTEM (Tamil & Higher Tamil)

## A1 (Distinction)

75 marks and above

## A2 (Distinction)

70 to 74

## B3

65 to 69 marks

## B4

60 to 64 marks

## C5

55 to 59 marks

## C6

50 to 54 marks

## D7

45 to 49 marks (fail)

## E8

40 to 44 marks (fail)

## F9

Ungraded

## B2. TYPES OF EMAILS, FORMAT AND TIPS ON HOW TO APPROACH THEM FOR BEST RESULTS

### மின்னஞ்சல் வகைகள், அமைப்புமுறை மற்றும் அவற்றில் சிறப்புத் தேர்ச்சிக்கான அணுகுமுறைகள்

### உறவு மின்னஞ்சல்

நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு எழுதப்படுவது.

கீழ்க்காணும் கருப்பொருள்களில் வினாக்கள் கேட்கப்படலாம்.

- தகவல் தெரிவித்தல்
- பாராட்டுத் தெரிவித்தல்
- அறிவுரை கூறுதல்
- ஆலோசனை கூறுதல்
- பரிந்துரைத்தல்
- ஆறுதல் கூறுதல்
- நன்றி தெரிவித்தல்
- மன்னிப்புக் கேட்டல்
- அழைப்பு விடுத்தல்
- வழிகாட்டுதல்

### அலுவலக மின்னஞ்சல்

நிறுவனங்களுக்கு அல்லது குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு எழுதப்படுவது.

கீழ்க்காணும் கருப்பொருள்களில் வினாக்கள் கேட்கப்படலாம்.

- புகார் செய்தல்
- முறையிடுதல்
- விமர்சனம் செய்தல்
- அனுமதி கேட்டல்
- விண்ணப்பித்தல்
- தகவல் கேட்டல்/தெரிவித்தல்

- மன்னிப்புக் கேட்டல்
- பரிந்துரைத்தல்
- பாராட்டுத் தெரிவித்தல்
- ஆலோசனை கூறுதல்

**மின்னஞ்சல் எழுதும்போது கவனிக்க வேண்டியவை :**

- **அமைப்பு முறை**

| | |
|---|---|
| 1 | அனுப்புநர் மின்னஞ்சல் முகவரி |
| 2 | பெறுநர் மின்னஞ்சல் முகவரி |
| 3 | பொருள் |
| 4 | நாள் |
| 5 | அன்புள்ள (உறவு மின்னஞ்சல் )<br>மதிப்பிற்குரிய (அலுவலக மின்னஞ்சல்) |
| 6 | நலம் விசாரித்தல் (உறவு மின்னஞ்சல்)<br>தன்னை அறிமுகப்படுத்துதல் (அலுவலக மின்னஞ்சல்) |
| 7 | கருத்து 1 |
| 8 | கருத்து 2 |
| 9 | கருத்து 3 |
| 10 | விடைபெறுதல் (இப்படிக்கு) |

- **தொனி** (Tone of Language)

    - உறவு மின்னஞ்சல்

      – நட்பு முறையில் எழுதப்பட வேண்டும் (friendly gesture)

      – வயதில் மூத்தவராக இருந்தால் (எ.கா: தாத்தா, பாட்டி, மாமா, அத்தை,பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்தி) மரியாதை கலந்த முறையில் எழுதப்பட வேண்டும்

    - *அலுவலக மின்னஞ்சல்*

      – பணிவான முறையில் எழுதப்பட வேண்டும்

## B4. STRUCTURE AND TIPS ON ESSAY WRITING

**கட்டுரை எழுதுவதற்கான அமைப்பு முறைகள் மற்றும் உதவிக் குறிப்புகள்**

- **அமைப்பு முறை – (விளக்க உரை / கருத்துத் தெரிவிப்பு)**

| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | (பத்தி 1) |
| 2. | கருத்து 1 | (பத்தி 2) |
| 3. | கருத்து 2 | (பத்தி 3) |
| 4. | கருத்து 3 | (பத்தி 4) |
| 5. | முடிவுரை | (பத்தி 5) |

- **அமைப்பு முறை – (சம்பவம் / சூழல்)**

| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | (பத்தி 1) |
| 2. | நிகழ்ச்சி 1 | (பத்தி 2) |
| 3. | நிகழ்ச்சி 2 | (பத்தி 3) |
| 4. | உச்சக்கட்டம் | (பத்தி 4) |
| 5. | முடிவுரை | (பத்தி 5) |

WORDSMITH
... YOUR LEARNING
SKILLS = Jump grades + achieve Big

### முன்னுரை அமைக்க உதவிக் குறிப்புகள்

**1. விளக்க முன்னுரை**

கட்டுரையின் முக்கியச் சொற்களை அடையாளங்கண்டு தகுந்த மேற்கோள்கள் அல்லது எடுத்துக் காட்டுகளுடன் விளக்கமளித்துத் தலைப்பை விளக்கி எழுதுதல்.

**எடுத்துக்காட்டு**

*அண்டைவீட்டாருடன் நாம் நட்புறவு வைத்துக்கொள்வதன் அவசியத்தைப் பற்றி விவரித்து எழுதவும்.*

''ஊருடன் கூடி வாழ்'' என்பது பழமொழி. இதன் பொருள் நாம் நம் அக்கம்பக்கத்தாருடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதாகும். ஆனால், இந்தப் பரபரப்பான உலகத்தில் நாம் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக்கொள்வது என்பது அரிதாகிக்கொண்டே இருக்கிறது. இணையத்தின் வழி உலகம் சுருங்கிக்கொண்டே

## கட்டுரைகளில் பத்தி அமைப்பதற்கான உத்திமுறை

| P (Point) | E (Explanation) | E (Evidence/Examples) | L (Link) |
|---|---|---|---|
| தலைப்பு வாக்கியம் | விளக்கம் | சான்றுகள் | தொடர்பு |

**எடுத்துக்காட்டு**

*இக்கால மாணவர்கள் தங்கள் பெற்றோர்களைவிட அவர்களுடைய நண்பர்களிடமே அதிக நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?*

| | |
|---|---|
| **தலைப்பு வாக்கியம்** | சிங்கப்பூரில் நமது உயர்தர வாழ்க்கைச் சூழலுக்கு ஈடுகொடுக்க பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். |
| **விளக்கம்** | வேலை நேரமும் அவர்களைத் தங்கள் பிள்ளைகளிடம் அதிக நேரத்தைச் செலவிட வழிவகுப்பதில்லை. இக்காரணத்தினால் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே இடைவெளி அதிகரிக்கிறது. இடைவெளி அதிகரித்தால் நெருக்கமும் குறைகிறது என்றுதானே அர்த்தம்? உண்மையைக் கூறினால், பெற்றோர்களை விடப் பிள்ளைகள் தங்கள் பணிப்பெண்களிடமே அதிக நெருக்கமாக இருக்கிறார்கள். |
| **சான்றுகள்** | இதற்குக் காரணம் பெற்றோர்கள் நேரமின்மை காரணமாகத் தங்கள் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ள பணிப்பெண்களை நியமிக்கிறார்கள். பணிப்பெண்கள் முழுநேரமும் வீட்டிலேயே இருப்பதால் அவர்களால் பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவழிக்க முடிகிறது. இது அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு பிணைப்பை உருவாக்க வாய்ப்பளிக்கிறது என்றால் அது மிகையில்லை. |
| **தொடர்பு** | நிலைமை இவ்வாறு இருக்கும்போது, பெற்றோர்களைவிட நண்பர்களைத்தானே அவர்களின் மனம் நாடும்? |

## முடிவுரை அமைக்க உதவிக் குறிப்புகள்

- **தொகுத்து எழுதுதல்**

  கட்டுரையில் எழுதிய கருத்துகளைச் சுருக்கி அதன் சாரத்தை மட்டும் எழுதி முடித்தல்.

- **ஆலோசனை / பரிந்துரை கூறுதல்**

  கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பிற்கு உங்கள் கருத்துகளை எழுதிவிட்டு முடிவில் அதற்கான ஆலோசனைகள் அல்லது பரிந்துரைகளை எழுதுதல்.

## C5. MARABHUTHODARGAL / INAIMOZHIGAL FROM MOE SYLLABUS (Sec 1 to Sec 4) WITH MEANINGS & EXAMPLE SENTENCES

### மரபுத்தொடர்கள் / இணைமொழிகள் - Sec 1 to Sec 4

(கல்வி அமைச்சுப் பாடத்திட்டத்தில் அமைந்துள்ள மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள் - பொருளும் & எடுத்துக்காட்டு வாக்கியங்களுடன்)

| உயர்நிலை 1 (மரபுத்தொடர்கள்) | | |
|---|---|---|
| எண் | தொடர் | பொருள் |
| 1 | ஆற அமர / ஆறவமர | நிதானமாகச் செய்தல் |
| வாக்கியம் | ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடங்களை விமலன் **ஆற அமரச் / ஆறவமரச்** செய்ததால் அனைத்து வினாக்களுக்கும் அவனால் விடை கண்டுபிடிக்க முடிந்தது. | |
| 2 | உதட்டளவில் | பேச்சளவில் மட்டும் |
| வாக்கியம் | **உதட்டளவில்** மட்டும் உறவாடும் நண்பர்களை நம்பி நாம் ஏமாறக் கூடாது. | |
| 3 | ஏட்டிக்குப்போட்டியாக | நேர்மாறாக |
| வாக்கியம் | இக்காலப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களின் சொல்லுக்கு **ஏட்டிக்குப்போட்டியாகச்** செய்வதால் குடும்பத்தில் பிளவுகள் ஏற்படுகின்றன. | |
| 4 | ஒருகை பார்த்தல் | வெற்றி பெறுவதாகச் சவால் விடுதல் |
| வாக்கியம் | இம்முறை தோற்றாலும் அடுத்த முறை ஓட்டப் பந்தயத்தில் **ஒருகை பார்க்கப்** போவதாக அன்பன் தன் நண்பனிடம் சவால் விட்டான். | |
| 5 | ஒளிவு மறைவு | மறைத்தல் |
| வாக்கியம் | மருத்துவரிடம் **ஒளிவு மறைவு** இல்லாமல் நம் குறைகளைக் கூறினால்தான், அவரால் நமக்குச் சரியான மருந்து கொடுக்க முடியும். | |
| 6 | ஓட்டைக்கை | செலவாளி |
| வாக்கியம் | **ஓட்டைக்கையனான** சித்தார் தாயார் கொடுக்கும் பணத்தை உடனுக்குடன் செலவழித்து விட்டுத் தன் நண்பர்களிடம் கடன் வாங்குவான். | |

## C6. SENTENCE STRUCTURE - QUESTIONS BASED ON GCE 'O' LEVEL FORMAT - TYPES, GUIDELINES ON HOW TO APPROACH THEM

### வாக்கியத்தை முடித்தெழுதுதல் - சாதாரண நிலைத் தேர்வுமுறையில் அமைக்கப் பெற்ற வாக்கிய அமைப்பு வகைகள் மற்றும் அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டு வாக்கியங்களுடன்

இப்பகுதியில் மாணவர்கள் 5 வகை வாக்கிய வகைகளைப் பற்றி அறிய வேண்டும்

- செய்வினை - செயப்பாட்டுவினை வாக்கியம்
- உடன்பாடு - எதிர்மறை வாக்கியம்
- காரண காரிய வாக்கியம்
- தன்வினை பிறவினை வாக்கியம்
- பொது வாக்கியம்

- **செய்வினை - செயப்பாட்டுவினை வாக்கியம்**

இவ்வகை வாக்கியங்கள் ஆங்கிலத்தில் Active & Passive voice என்னும் வாக்கிய வகைகளைக் குறிக்கும்

செய்வினை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாறும்போது கவனிக்க வேண்டியவை :

- எழுவாயில் (subject) 'ஆல்' என்னும் வேற்றுமை உருபு சேரும்
- செயப்படுபொருளில் (object) 'ஐ' என்னும் வேற்றுமை உருபு நீக்கப்படும்
- வினைமுற்று (ending verb) 'பட்ட', 'படுகின்ற', 'படும்' என்று காலத்திற்கு ஏற்றாற்போல் அமையும்
- காலம் மாறாது

*எடுத்துக்காட்டுகள்*

| **செய்வினை வாக்கியம்** | **செயப்பாட்டுவினை வாக்கியம்** |
|---|---|
| *சிறப்பு விருந்தினர் வருங்காலத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்புகளைப் பற்றி உரையாற்றினார்.* | *சிறப்பு விருந்தினரால் வருங்காலத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் பற்றி உரையாற்றப்பட்டது.* |
| *தமிழர்கள் வாழையிலையில் உணவு உண்ணும் பழக்கத்தை இன்றும் கடைப்பிடிக்கிறார்கள்.* | *தமிழர்களால் வாழையிலையில் உணவு உண்ணும் பழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது.* |

# மாதிரி வாசிப்புப் பயிற்சிகள்

**பனுவல் 1**

விருந்தோம்பல் என்பது விருந்தினர்களை உபசரிக்கும் பண்பினைக் குறிக்கும். இது தமிழர்களுக்கே உரிய ஒரு பண்பாடாகும். முற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வீடுகளுக்கு உணவு உண்ண வரும் முனிவர்களையும், ஞானிகளையும் போற்றி அவர்களுக்கு அறுசுவை உணவு படைத்தார்கள். வீட்டில் உணவு தீர்ந்துவிட்ட நிலையிலும் வீட்டில் இருக்கும் காய்கறிகள், கனிவகைகள், தானியங்கள் முதலியவற்றை உடனே சுடச்சுடச் சமைத்து இன்முகத்துடன் உணவு பரிமாறுவர். வீட்டிலுள்ளவர்களுக்கு உணவு இல்லையென்றாலும் வந்த விருந்தினர்கள் திருப்தியடையும்வரை அவர்களுக்கு உணவிடுவர். வீட்டில் தீராத துன்பங்கள் நிகழ்ந்திருந்தாலும்கூட அதைத் துளியளவும் முகத்தில் காட்டிக்கொள்ளாமல் வந்திருப்பவர்களை முகமலர வரவேற்பார்கள். விருந்தினர்கள் தங்கள் இல்லத்திலிருந்து மறையும்வரை வாசலில் நின்று வழி அனுப்பி வைப்பார்கள். இதுவே அக்கால விருந்தோம்பலாகும்.

இக்காலத்தில் வாழும் தமிழர்களும் அதன்வழியே வந்தவர்கள் ஆவர். தரை வீடாக இருந்தாலும் சரி, மாடி வீடாகயிருந்தாலும் சரி, தங்கள் இல்லங்களுக்கு வருகை புரியும் உறவினர்களையும் நண்பர்களை யும் இன்முகத்துடன் வரவேற்கிறார்கள். அதுமட்டுமில்லாமல், தீபாவளி, நோன்புப் பெருநாள், கிறிஸ்துமஸ் போன்ற வைபவங்களில் விருந்துபசரிப்பிற்குப் பஞ்சம் இருக்காது. இவ்வாறாக, விருந்தோம்பல் இப்போதும் அனுசரிக்கப்படுகிறது. காலம் மாறினாலும் நமது வழிவழியாக வந்த பண்பாடும் கலாச்சாரமும் எந்நாளும் மாறா.

**பனுவல் 2**

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது. காலம் சென்றால் திரும்பாது, கடமை தவறினால் ஒருவரால் உயர்வடைய முடியாது. காலமும் கடமையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. தக்க காலத்தில் செய்யத்தவறிய கடமை யாருக்கும் பயன்படாமல் விரயமாகிவிடும்.

மாணவர்கள் படிக்கும் பருவத்தில் நெறி தவறாமல் கல்வியைப் பயின்று தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அது அவர்களின் கடமையாகும். இந்தக் கடமையைப் புறக்கணிக்கும் மாணவர்கள், காலங்கடந்து தங்கள் தவற்றினை உணர்கிறார்கள். காலத்தோடு படிக்காத காரணத்தினால் பிற்காலத்தில் இவர்களின் வாழ்க்கை இவர்களுக்கே சூன்யமாக அமைந்துவிடுகிறது. வளர்ந்த பிள்ளைகளுக்குத் தங்கள் சொந்தக் காலில் நிற்கும் நிலை வந்தவுடன் பெற்றோர்களைக் கவனிக்கும் கடமை அவர்களுடையதாய் ஆகிவிடுகிறது. வயதான பெற்றோரைப் பாரமாக நினைத்து அவர்களை முதியோர் இல்லங்களில் தள்ளி விடுவது நியாயமற்ற செயலாகும். சீராட்டிப் பாராட்டி, பாலூட்டி, உணவூட்டி, அறிவூட்டி நம்மை வளர்த்த தாய்தந்தையரைப் புறக்கணிப்பது எந்த விதத்தில் நியாயமாகும்? எவனொருவன் தன் இளமைக்காலத்தில் பெற்றவர்களை அலட்சியப்படுத்துகிறானோ, அவன் தன் முதுமைக்காலத்தில் நிச்சயம் அதற்கான தண்டனையை அனுபவித்தே தீருவான்.

முதுமைக்காலம் என்பது எல்லாரையும் நண்பர்களாகவும் உறவுகளாகவும் நேசிக்கும் காலம். இக்காலத்தில் ஒருவர் பழைய பகையையும் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களையும் மனதில் சுமந்து கொண்டு வாழ்வது தமக்கே துன்பத்தைத் தேடிக்கொள்வதற்குச் சமமாகும். தனக்குத் துன்பம் விளைவித்தவர்களை மறந்து, மன்னிப்பது முதியவர்களின் கடமையாக அமைகிறது. அப்போதுதான் அவர்களின் மீதமிருக்கும் காலம் இன்பமயமானதாகும்.

# E10. GCE ‘O’ LEVEL HTL FORMAT - ERROR CORRECTION, MERGING WORDS, SUMMARY WRITING EXERCISES

## சாதாரண நிலை உயர்தமிழ்த் தேர்வு அடிப்படையில் அமைந்த பிழை திருத்தம், சொற்புணர்ச்சி, சுருக்கி வரைதல் பயிற்சிகள்

### பிழை திருத்தப் பயிற்சிகள்

பிழை திருத்தம் கீழ்க்காணப்படும் மொழிக்கூறுகளில் இடம்பெறலாம்.

★ ஒருமை, பன்மை ★ ஒலி வேறுபாடு ★ குறில், நெடில் ★ எழுத்துப் பிழை

★ மூவிடப் பெயர்கள் ★ உயர்திணை, அஃறிணை ★ ஆண்பால், பெண்பால்

**பயிற்சி 1**

கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.

| | |
|---|---|
| | உண்மை சில வேளைகளில் தன் உண்மையான தோற்றத்தைக் காட்டக் காலம் எடுக்கும். |
| Q(1) | பொய்மையைச் சிறிது காலம் உலவ விட்டு வேடிக்கை பார்த்துவிட்டு, அதன்பிறகே உண்மை தான் |
| | உருவத்தைக் காட்டும். உண்மை வெளிவரக் காலதாமதமாகும்போது சிலர் அதைப் |
| Q(2) | புறக்கணிக்கிறார்கள். வாய்மை வெல்லாது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். உண்மையாக |
| Q(3) | நடந்துகொள்வது பயன் இல்லை, பழியும் பாவமும்தான் வந்து சேரும் என்று தீர்மானித்துத் தவறான |
| Q(4) | பாதையில் செல்லத் தொடங்கிவிடுகிறார்கள். தீமை தொடக்கத்தில் இன்பத்தைக் கொடுத்தால் அது |
| | சிற்றின்பமே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். சிற்றின்பம் நிலையானது அன்று. |
| | அது நம் வாழ்க்கையின் அழிவுக்கு வடிகால். உண்மை ஒருவருக்குப் பல துன்பங்களைக் கொடுத்தாலும் |
| Q(5) | அது எல்லாம் அவரைப் பக்குவப்படுத்துவதற்கே தவிர, அவரை வாட்டிவதைப்பதற்கல்ல. |

**விடைகள்:**

| | |
|---|---|
| Q(1) | |
| Q(2) | |
| Q(3) | |
| Q(4) | |
| Q(5) | |

## சேர்த்தெழுதுதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Q1 | மூன்று | + | வகை | = | ________________ |
| Q2 | ஆறு | + | சுவை | = | ________________ |
| Q3 | வடக்கு | + | கிழக்கு | = | ________________ |
| Q4 | சொல் | + | ஓவியம் | = | ________________ |
| Q5 | மாதம் | + | இதழ் | = | ________________ |
| Q6 | ஆண்டு | + | ஒன்று | = | ________________ |
| Q7 | கல் | + | தூண் | = | ________________ |
| Q8 | விதம் | + | விதம் | = | ________________ |
| Q9 | பட்டு | + | ஆடை | = | ________________ |
| Q10 | பசுமை | + | தமிழ் | = | ________________ |
| Q11 | அருமை | + | உயிர் | = | ________________ |
| Q12 | காடு | + | நிலம் | = | ________________ |
| Q13 | பெருமை | + | தன்மை | = | ________________ |
| Q14 | மேடு | + | பள்ளம் | = | ________________ |
| Q15 | அச்சம் | + | தவிர் | = | ________________ |
| Q16 | ஐந்து | + | வகை | = | ________________ |
| Q17 | பத்து | + | ஒன்பது | = | ________________ |
| Q18 | ஆறு | + | கரை | = | ________________ |
| Q19 | நீர் | + | ஊற்று | = | ________________ |
| Q20 | பசுமை | + | பொன் | = | ________________ |
| Q21 | வேறு | + | உலகம் | = | ________________ |
| Q22 | காடு | + | ஆறு | = | ________________ |
| Q23 | கால் | + | ஆண்டு | = | ________________ |
| Q24 | சிறுமை | + | இன்பம் | = | ________________ |
| Q25 | தெரு | + | கூத்து | = | ________________ |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

**சுருக்கி எழுதுவதற்கான வழிகாட்டுக் குறிப்புகள்**

- கொடுக்கப்பட்டிருக்கும் பனுவலைக் கவனமாகப் படிக்கவும்
- அதிலிருக்கும் கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்
- கருத்துகளைக் கூறும் முக்கியச் சொற்களை (key words) அடையாளம் காண வேண்டும்
- அவற்றை அடிக்கோடிட வேண்டும்
- பின் உமது சொந்த நடையில் முக்கியச் சொற்களின் துணைகொண்டு கருத்துகளை மீண்டும் எழுத வேண்டும்
- பனுவலில் இருக்கும் வர்ணனைகள், அழகிய தொடர்கள் போன்றவற்றை அகற்றிவிட வேண்டும்
- சிறு சிறு வாக்கியங்களாக எழுதவும் (அப்போதுதான் எழுத்துப் பிழைகள் ஏற்படுவதைக் குறைக்கலாம்)
- பனுவலில் இருக்கும் கருத்துகளை மட்டுமே எழுத வேண்டும், உமது சொந்தக் கருத்துகளை அதில் சேர்க்கக் கூடாது
- இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திக் கருத்துகளை இணைக்க வேண்டும் (ஆனால், ஆகையால்)
- சொற்களைச் சேர்த்தெழுதுதல் வேண்டும்
- பனுவலை முதலில் வேறு தாளில் எழுதிச் சரிபார்க்கவும்
- பிறகு விடைத்தாளில் எழுதி, சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்

**சுருக்கி எழுதும் பயிற்சிகள்**

**பயிற்சி 1**

''பெண்கள் அறிவை வளர்த்தால் இவ்வையகம் பேதைமை அற்றிடும்'' என்று பாரதியார் பெண்ணின் பெருமையைப் பற்றித் தமது கவிதைகளில் பாடியுள்ளார். மகாகவி பாரதியார் வாழ்ந்த காலகட்டத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படவில்லை. பிறந்தவுடனேயே கொடிய விஷத்தை அரைத்துக் கொடுத்து அவர்களைக் கொல்லும் கொடூரம் நடந்துகொண்டிருந்தது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பெண்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் அவர்களின் கல்விக்கு முட்டுக்கட்டை போடப்பட்டிருந்தது. 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று பெண்கள் வாழ்வதற்குத் தங்கள் கணவனையே நம்பியிருந்தனர். கணவன் இறந்துவிட்டால் அவனுடன் உடன்கட்டை ஏறும் மூடப் பழக்கத்திற்குப் பெண்களை அடிமையாக்கியிருந்தனர்.

முற்காலத்தில் தெருக்கூத்துகளிலும் மேடை நாடகங்களிலும் நடிக்க பெண்களுக்கு அனுமதி கிடையாது. இதன் காரணத்தினால் அக்கால நாடகங்களில் பெண் வேடங்களை ஆண்களே போட்டு நடித்தார்கள். உழவுத்தொழில் தலைகாட்டிய பிறகு வயல் வேலைகளுக்கு ஆட்கள் அதிகமாகத் தேவைப்பட்டனர். நாற்று நடுதல், கதிரறுத்தல் போன்ற வேலைகளைச் செய்ய வீட்டிலிருக்கும் பெண்களை அனுப்பினர். இப்பெண்கள் தங்கள் பச்சிளங்குழந்தைகளை மரத்தில் தொட்டில்கட்டித் தூங்க வைத்துவிட்டு வேகாத வெயிலில் வயலில் வேலை பார்த்தனர். பின், வீட்டுக்கு வந்தும் சற்றும் ஓயாது, வீட்டு வேலைகளைக் கவனித்து, சமைத்துமுடித்து, கணவனுக்குப் பணிவிடைகள் செய்து இப்பெண்கள் ஓடாய்த் தேய்ந்து போனார்கள்.

நாகரிகம் வளர்ந்து பெண்களுக்குக் கல்வி வாசலைத் திறந்துவிட்டது. பெண்கள் படிக்கத் தொடங்கினர். தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு நல்ல உத்தியோகங்களில் அமர்ந்தனர். ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மருத்துவர், வழக்குரைஞர், பொருளியலாளர், தொழில் அதிபர்கள் என்று உயர்ந்தனர். இன்று ஒரு நாட்டையே நிர்வகிக்கும் ஆண்களின் மத்தியில் பெண்களும் இருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை. ‘பாரதி கண்ட புதுமைப் பெண்களாக’ பெண்கள் உருவெடுத்து விட்டார்கள். இனி, அவர்களின் எதிர்காலம் வானத்தை நோக்கிப் போய்க்கொண்டு இருக்குமே தவிர ஒருநாளும் தரையிறங்காது.

கருத்தறிதல் பகுதியில் பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சியைப் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைப் பொருள் பிறழாது உனது சொந்த நடையில் 40 சொற்களில் சுருக்கி எழுதவும்.

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

## F11. 60 BEST EXAM TOPICS THIRUKKURAL AND PALAMOZHIGAL

### 60 சிறந்த தேர்வுக்குரிய தலைப்புகளில் திருக்குறள் மற்றும் பழமொழிகள்

| எண் | பொருள் |
|---|---|
| 1 | காலம் |
| 2 | ஈகை |
| 3 | ஒழுக்கமுடைமை |
| 4 | பொறாமை |
| 5 | பொறாமையின் இயல்பு |
| 6 | விருந்தோம்பல் |
| 7 | அன்புடையாரின் இயல்பு |
| 8 | அன்பின் சிறப்பு |
| 9 | அடக்கமுடைமை |
| 10 | புறங்கூறாமை |
| 11 | இனியவை கூறல் |
| 12 | செய்நன்றியறிதல் |
| 13 | நன்றி மறவாமை |
| 14 | ஒழுக்கத்தின் சிறப்பு |
| 15 | புகழ் |
| 16 | வாய்மை |
| 17 | இன்னா செய்யாமை |
| 18 | கல்வி |
| 19 | அறிவுடைமை |
| 20 | பெரியாரைத் துணைக்கோடல் |

WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

| | |
|---|---|
| 21 | தெரிந்து செயல்வகை |
| 22 | கேள்வி |
| 23 | ஊக்கம் |
| 24 | நாடு |
| 25 | நட்பு |
| 26 | தீய நட்பு |
| 27 | பண்புடையோரின் நட்பு |
| 28 | நல்ல வாழ்க்கை |
| 29 | சொல் |
| 30 | பொய் சொல்லாமை |
| 31 | அமைச்சு |
| 32 | மானம் |
| 33 | மக்கட்பேறு |
| 34 | வான் சிறப்பு |
| 35 | நாவடக்கம் |
| 36 | பொறுமை |
| 37 | பொருள் |
| 38 | தீயவழியிலிருந்து காத்தல் |
| 39 | பகை |
| 40 | போர் |
| 41 | பண்பில்லாதவர் |
| 42 | சினம் |
| 43 | சினத்தின் இயல்பு |
| 44 | செல்வம் |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + achieve Big

| | |
|---|---|
| 45 | முயற்சி |
| 46 | முயற்சியின் இயல்பு |
| 47 | சமநிலை |
| 48 | இடுக்கண் |
| 49 | துன்பப்படாதவர் |
| 50 | அரசாங்கம் |
| 51 | பெண் துணிச்சல் |
| 52 | தந்தை பிள்ளை உறவு |
| 53 | தாய் பிள்ளை உறவு |
| 54 | நட்பை மறவாதீர் |
| 55 | சொல் வடு |
| 56 | பழி கூறுதல் |
| 57 | முகம் ஒரு கண்ணாடி |
| 58 | வல்லவன் |
| 59 | பொருள் திருட்டு |
| 60 | மனஉறுதி |

# திருக்குறள் & பழமொழி

| 1. காலம் | |
|---|---|
| குறள் | ஞாலம் கருதினும் கைகூடும் காலம்<br>கருதி யிடத்தாற் செயின் |
| பொருள் | ஒரு செயலைச் செய்வதற்குரிய காலத்தையும் இடத்தையும் அறிந்து செய்யும்போது ஒருவனுக்கு இந்த உலகம் போற்றும் வெற்றி கிடைக்கும். |
| பழமொழி | • காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.<br>• பருவத்தே பயிர்செய். |
| **2. ஈகை** | |
| குறள் | வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றுஎல்லாம்<br>குறியெதிர்ப்பை நீரது உடைத்து |
| பொருள் | வறுமையில் வாடுபவருக்கு எந்தவிதப் பலனையும் எதிர்பார்க்காமல் செய்வதே உண்மையான தர்மமாகும். |
| பழமொழி | • தர்மம் தலைகாக்கும்.<br>• ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.<br>• அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன். |
| **3. ஒழுக்கமுடைமை** | |
| குறள் | ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்<br>உயிரினும் ஓம்பப் படும் |
| பொருள் | ஒழுக்கம் ஒருவனுக்குச் சிறப்பினைப் பெற்றுத் தருவதால், அது உயிரைவிட மேலானதாகக் கருதப்படுகிறது. |
| பழமொழி | • ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று. |
| **4. பொறாமை** | |
| குறள் | ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன்நெஞ்சத்து<br>அழுக்காறு இலாத இயல்பு |
| பொருள் | பொறாமை என்னும் தீய குணத்தை மனதளவிலும் கொள்ளாமல் ஒழுக்க முடையவனாக வாழ்வதே சிறப்பு. |
| பழமொழி | • கெடுவான் கேடு நினைப்பான். |

WORDSMITH BEYOND LEARNING

## F12. 100 USEFUL BEST QUOTES AND PROVERBS

### 100 பயனுள்ள சிறந்த மேற்கோள்கள் & பொன்மொழிகள்

| எண் | பொருள் |
|---|---|
| 1 | குடும்பம் |
| 2 | முயற்சி |
| 3 | நட்பு |
| 4 | தன்னம்பிக்கை |
| 5 | ஆரோக்கியம் |
| 6 | நாடு |
| 7 | தமிழ்மொழி |
| 8 | வெற்றி/சாதனை |
| 9 | நேரம் |
| 10 | கல்வி |
| 11 | தகவல் தொழில்நுட்பம் |
| 12 | மறுபயனீடு |
| 13 | அடையாளம் |
| 14 | துன்பம் |
| 15 | அறிவு |
| 16 | செயல் |
| 17 | அனுபவம் |
| 18 | ஒழுக்கம் |
| 19 | வாழ்க்கை |
| 20 | கோபம் |

WORDSMITH BEYOND LEARNING

| | |
|---|---|
| **1. குடும்பம்** | |
| 1. | நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். |
| 2. | தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை. |
| 3. | குடும்பம் ஒரு கோயில் அதில் அன்னையும் தந்தையும் தெய்வங்கள். |
| 4. | அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். |
| 5. | அன்பை உள்ளே வைத்துக்கொண்டு எதிரியைப் போல் தென்படும் ஓர் உறவுதான் அப்பா. |
| **2. முயற்சி** | |
| 6. | முயலும் வெல்லலாம்; ஆமையும் வெல்லலாம்; ஆனால் முயலாமை என்றுமே வெல்லாது. |
| 7. | முயற்சிகள் தவறலாம், ஆனால் முயற்சி செய்யத் தவறலாமா? |
| 8. | முடியும் வரை முயற்சி செய், முடியாது போனால் பயிற்சி செய். |
| 9. | பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யும் ஒரே வேலை அவரைத் தட்டிக்கொடுப்பதுதான் - *விவேகானந்தர்* |
| 10 | விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கல்ல - *விவேகானந்தர்* |
| **3. நட்பு** | |
| 11. | உன் நண்பர்கள் யாரென்று சொல் நீ யாரென்று நான் சொல்கிறேன். |
| 12. | ஒரு சகோதரன் இல்லாமல் வாழ்ந்திடலாம். ஆனால், ஒரு நண்பன் இல்லாமல் வாழ முடியாது. |
| 13. | எதிர்பார்க்கும்போது நல்ல நண்பர்கள் கிடைப்பதில்லை, நல்ல நண்பர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை. |
| 14. | தோள் கொடுப்பான் தோழன். |
| 15. | தூரத்துச் சொந்தம்போல் தூரத்து நண்பனில்லை. ஏனெனில் நண்பனான பின் யாரும் தூரமில்லை. |

WORDSMITH
BEYOND LEARNING

## F13. 100 IMPORTANT EXAM BASED INIYA THODARGAL

### 100 முக்கிய தேர்வுக்கு உதவும் இனிய தொடர்கள்

| எண் | பொருள் |
|---|---|
| 1 | காலம் |
| 2 | தீய பழக்கம் |
| 3 | பெற்றோர் பிள்ளை உறவு (பிளவு) |
| 4 | பெற்றோர் பிள்ளை உறவு (பிணைப்பு) |
| 5 | கால வரையறை |
| 6 | நவீனம் / நாகரிகம் |
| 7 | ஒற்றுமை / இனநல்லிணக்கம் |
| 8 | நினைவுகூரல் |
| 9 | நெரிசல் |
| 10 | சிந்தனை/கற்பனை |
| 11 | அமைதி |
| 12 | கேட்டல் |
| 13 | இயற்கை |
| 14 | அழகு |
| 15 | அழுகை |
| 16 | உணர்ச்சி |
| 17 | போட்டி |
| 18 | சூழ்நிலை |
| 19 | வாய்ப்பு / சந்தர்ப்பம் |
| 20 | எண்ணம் |

WORDSMITH BEYOND LEARNING SKILLS = JUMP grades + achieve Big

| | |
|---|---|
| **1. காலம்** | |
| 1. | காலச்சக்கரம் உருண்டோடியது |
| 2. | கண்மூடித் கண் திறப்பதற்குள் வளர்ந்து விடுகிறார்கள் |
| 3. | காலத்தின் கட்டாயம் |
| 4. | நொடிப் பொழுதையும் வீணாக்காமல் |
| 5. | நேரத்திற்குப் பின்னால் ஓடுகிறார்கள் |
| **2. தீய பழக்கம்** | |
| 6. | பாதாளத்தில் தள்ளிவிடுகிறது |
| 7. | வலைக்குள் சிக்கி விடுகிறார்கள் |
| 8. | எளிதில் அடிமையாகி விடுகிறார்கள் |
| 9. | எழ முடியாமல் தத்தளிக்கிறார்கள் |
| 10. | கைகளுக்கு விலங்கிட்டதுபோல் ஆகிவிடுகிறது |
| **3. பெற்றோர் - பிள்ளை உறவு (பிளவு)** | |
| 11. | ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுகிறார்கள் |
| 12. | தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கிறார்கள் |
| 13. | முதுகுக்குப் பின்னே கதவை அடைக்கிறார்கள் |
| 14. | கண்டும் காணாததைப்போல் இருக்கிறார்கள் |
| 15. | அலட்சியப் பார்வையை வீசுகிறார்கள் |
| **4. பெற்றோர் - பிள்ளை உறவு (பிணைப்பு)** | |
| 16. | அன்புடன் அரவணைக்கிறார்கள் |
| 17. | உச்சிகுளிர்ந்து கட்டியணைத்தார் |
| 18. | பாசமழை பொழிந்தது |
| 19. | ஒன்றுக்குள் ஒன்றாய் நெல்லுக்குள் அரிசியாய் |
| 20. | பெற்றோரைப் போற்றிப் புகழ் பாட வேண்டும் |

WORDSMITH
BEYOND LEARNING

## F14. 50 BEST SONG LYRICS SUITABLE FOR ESSAY WRITING

### 50 தலைசிறந்த திரைப்படப் பாடல் வரிகள் கட்டுரைகளில் பயன்படுத்த

| எண் | பொருள் |
|---|---|
| 1 | பெற்றோர் பெருமை |
| 2 | பணம் |
| 3 | தன்னம்பிக்கை / விடாமுயற்சி |
| 4 | மகிழ்ச்சி / சிரிப்பு |
| 5 | கோபம் |
| 6 | நட்பு |
| 7 | உழைப்பு / தொழில் |
| 8 | தீயசெயல் |
| 9 | வெற்றி |
| 10 | காலம் |

| 1. பெற்றோர் பெருமை | |
|---|---|
| 1. | பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்<br>அறிவூட்டும் தந்தை நல்வழிகாட்டும் தலைவன் |
| 2. | தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை |
| 3. | அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு |
| 4. | அந்த வானத்தில் இரண்டு தீபங்கள், அவை சூரியன் சந்திரனே<br>என் வாழ்வுக்கு இரண்டு ஜீவன்கள், என் தாயுடன் தந்தையுமே |
| 5. | அம்மா என்றழைக்காத உயிரில்லையே, அம்மாவை வணங்காது உயர்வில்லையே |

# F15. 30 MARABHUTHODARGAL, 30 INAIMOZHIGAL, 30 UVAMAITHODARGAL - APART FROM SYLLABUS

## 30 மரபுத்தொடர்கள், 30 இணைமொழிகள், 30 உவமைத்தொடர்கள் பாடத்திட்டத்தில் அல்லாதவை

### 30 மரபுத்தொடர்கள் (பொதுவானவை)

| | மரபுத்தொடர் | பொருள் | வாக்கியம் |
|---|---|---|---|
| 1. | வாயடைத்துப் போதல் | அதிர்ச்சி | வகுப்பில் எப்போதுமே அமைதியாக இருக்கும் கல்பனா பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்றதைக் கண்ட அவளின் நண்பர்கள் **வாயடைத்துப் போனார்கள்**. |
| 2. | மூக்கை நுழைத்தல் | அடுத்தவர் பிரச்சினையில் தேவையில்லாமல் கலந்துகொள்வது | சிலர் தேவையில்லாமல் அடுத்தவரின் குடும்பப் பிரச்சினைகளில் **மூக்கை நுழைப்பர்**. |
| 3. | வாய்ப்பூட்டுப் போடுதல் | பேசும் சுதந்திரத்தைக் கொடுக்காமல் இருப்பது | ஊர்த் தலைவன் தன் மக்களுக்கு **வாய்ப்பூட்டுப் போட்டு** விட்டதால் அவர்கள் நடந்த சம்பவத்தைப் பற்றிக் காவலர்களிடம் கூற அஞ்சினர். |
| 4. | நடைப்பிணம் | எந்தவித உணர்வும் இல்லாமல் இருப்பது | தன் கணவரின் மறைவிற்குப் பிறகு கமலா ஒரு **நடைப்பிணம்** போல்தான் வாழ்க்கை நடத்தி வருகிறாள். |
| 5. | தலைதெறிக்க | மிகவும் வேகமாக | மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்ட கோபு தனது அலுவலகத்திலிருந்து வீட்டிற்குத் **தலைதெறிக்க** ஓடி வந்தார். |
| 6. | பூசிமெழுகுதல் | மூடிமறைத்தல் | தன் மகளைப் பற்றி மற்றவர்கள் விசாரிக்கும்போதெல்லாம் அவள் செய்த தவறு தெரியாமலிருக்க மல்லிகா **பூசிமெழுகினாள்**. |
| 7. | சொல்லிக்காட்டுதல் | செய்த உதவியை மற்றவர்களிடம் தெரிவித்தல் | தன் உயிர் நண்பன் தனக்குச் செய்த உதவியைப் பலர் முன்னிலையில் **சொல்லிக்காட்டியதால்** வேலன் வேதனையடைந்தான். |

## G16. 500 BEST WORDS WITH MEANINGS (TAMIL - TAMIL)

### 500 சிறந்த சொற்பொருள்கள் (தமிழ் - தமிழ்)

| | சொல் | பொருள் |
|---|---|---|
| 1. | அகந்தை | செருக்கு |
| 2. | அகிலம் | உலகம் |
| 3. | அஞ்சலி | வணக்கம் / இறுதி மரியாதை |
| 4. | அம்சம் | அங்கம் |
| 5. | அறிவிலி | முட்டாள் |
| 6. | அடைக்கலம் | தஞ்சம் |
| 7. | அண்மையில் | சமீபத்தில் |
| 8. | அணுகுதல் | நெருங்குதல் |
| 9. | அப்புறப்படுத்துதல் | வெளியேற்றுதல் (ELIMINATION) |
| 10. | அபகரித்து | திருடி |
| 11. | அரவணைப்பு | ஆதரவு |
| 12. | அர்ப்பணிப்பு | தியாகம் |
| 13. | அலங்கோலம் | சீர்குலைவு / தாறுமாறு |
| 14. | அலாதி | சிறப்பு, தனி |
| 15. | அல்லல் | துன்பம் |
| 16. | அவதி | துன்பம் |
| 17. | அவாவில் | ஆசையில் |
| 18. | அறைகூவல் | அறிவிப்பு |
| 19. | அறுதியிட்டு | உறுதியாக |
| 20. | அணுக்கமாக | நெருக்கமாக |
| 21. | ஆக்கிரமித்து | சட்ட விரோதமாகக் கைப்பற்றி |
| 22. | ஆசனம் | இருக்கை |
| 23. | ஆணித்தரம் | உறுதி |
| 24. | ஆணிவேர் | முக்கியமான பகுதி |
| 25. | ஆண்மை | வீரம் |

## G17. 20 BEST EXAM BASED ORAL TOPIC DISCUSSION AND ESSAY WRITING (CONTENT VOCABULARY) - (ENGLISH TO TAMIL)

**20 சிறந்த தேர்வுக்குரிய தலைப்புகளில் கருப்பொருள் சார்ந்த சொல்வளம் வாய்மொழிக் கலந்துரையாடல் மற்றும் கட்டுரையில் பயன்படுத்தக்கூடியவை (ஆங்கிலம் - தமிழ்)**

| எண் | பொருள் |
|---|---|
| 1 | Natural Disasters - இயற்கைப் பேரிடர்கள் |
| 2 | Values & Character - நற்பண்புகள் |
| 3 | Transportation - போக்குவரத்து |
| 4 | Education - கல்வி |
| 5 | Information Technology - தகவல் தொழில்நுட்பம் |
| 6 | Community - சமூகம் |
| 7 | Goverment - அரசாங்கம் |
| 8 | Recycle - மறுபயனீடு / மறுசுழற்சி |
| 9 | Family Bond - குடும்பப் பிணைப்பு |
| 10 | Foreign Talent - வெளிநாட்டுத் திறன் |
| 11 | Healthy LifeStyle - ஆரோக்கியமான வாழ்க்கைமுறை |
| 12 | Racial Harmony - இனநல்லிணக்கம் |
| 13 | Environment - சுற்றுப்புறம் |
| 14 | CCA - இணைப்பாட நடவடிக்கை |
| 15 | Challenges of Teenagers - இளையர்கள் எதிர் நோக்கும் சவால்கள் |
| 16 | Aging Population - மூப்படையும் சமுதாயம் |
| 17 | Total Defence - முழுமைத் தற்காப்பு |
| 18 | Mother Tongue - தாய்மொழி |
| 19 | Saving - சேமிப்பு |
| 20 | Tour - சுற்றுப்பயணம் |

| | | |
|---|---|---|
| **1. Natural Disasters / இயற்கைப் பேரிடர்கள்** | | |
| 1 | Earthquake | நிலநடுக்கம் |
| 2 | Landslide | நிலச்சரிவு |
| 3 | Flood | வெள்ளம் |
| 4 | Drought | வறட்சி |
| 5 | Famine | உணவுப் பஞ்சம் |
| 6 | Volcano | எரிமலை |
| 7 | Tornado/Huricane | சூறாவளி |
| 8 | Tsunami | ஆழிப்பேரலை |
| 9 | Forest Fire | காட்டுத்தீ |
| 10 | Haze | புகைமூட்டம் |
| 11 | Hall Stone Rain | பனிக்கட்டி மழை |
| 12 | Fog | மூடுபனி |
| **2. Values & Character / நற்பண்புகள்** | | |
| 1 | Patience | பொறுமை |
| 2 | Empathy | பிறர் நலன் கருதுதல் |
| 3 | Understanding | புரிந்துணர்வு |
| 4 | Integrity | நேர்மை |
| 5 | Trust | நம்பகம் |
| 6 | Truthful | வாய்மை |
| 7 | Faithful | நம்பிக்கை |
| 8 | Tolerance | சகிப்புத்தன்மை |
| 9 | Grateful | நன்றியுணர்வு |

WORDSMITH BEYOND LEARNING

## G18. 50 BEST WORDS - USED TO EXPLAIN THE SAME MEANING IN DIFFERENT CONTEXT

**50 சிறந்த ஒரே பொருளை விளக்கும் சூழலுக்கேற்ற சொற்கள் - தேர்வுக்குரிய தலைப்புகளில்**

| எண் | பொருள் |
|---|---|
| 1 | சொன்னான் |
| 2 | சாப்பிட்டான் |
| 3 | சென்றான் |
| 4 | கவலைப்பட்டான் |
| 5 | பயந்தான் |
| 6 | பார்த்தான் |
| 7 | தூங்கினான் |
| 8 | எடுத்துக்கொண்டான் |
| 9 | உடைந்தது |
| 10 | நடந்தது / நடந்து சென்றான் |
| 11 | சிரித்தான் |
| 12 | வந்தான் |
| 13 | விழுந்தான் |
| 14 | இருந்தார்கள் / இருந்தது |
| 15 | குடித்தான் |
| 16 | செய்தான் |
| 17 | இறந்தார் |
| 18 | அழுதான் |
| 19 | தூக்கினான் |
| 20 | கேட்டான் / கேட்டது |
| 21 | எழுதினான் |
| 22 | முயன்றான் |

| | | | |
|---|---|---|---|
| **1. சொன்னான்** | | | |
| பிதற்றினான் | கத்தினான் | எச்சரித்தான் | முணுமுணுத்தான் |
| பாராட்டினான் | மிரட்டினான் | முறையிட்டான் | பதிலளித்தான் |
| **2. சாப்பிட்டான்** | | | |
| உண்டான் | சுவைத்தான் | மென்றான் | தின்றான் |
| விழுங்கினான் | கடித்தான் | ருசித்தான் | புசித்தான் |
| **3. சென்றான்** | | | |
| நடந்தான் | விரைந்தான் | நகர்ந்தான் | அகன்றான் |
| மறைந்தான் | விடைபெற்றான் | சிட்டாய்ப்பறந்தான் | ஓடிவிட்டான் |
| **4. கவலைப்பட்டான்** | | | |
| வருத்தப்பட்டான் | துன்பப்பட்டான் | அவதிப்பட்டான் | துயருற்றான் |
| அல்லலுற்றான் | வேதனைப்பட்டான் | புண்பட்டான் | இன்னலுற்றான் |
| **5. பயந்தான்** | | | |
| பதறினான் | நடுங்கினான் | அரண்டான் | மிரண்டான் |
| கிலி கொண்டான் | படபடத்தான் | பதை பதைத்தான் | ஆட்டங் கண்டான் |
| **6. பார்த்தான்** | | | |
| நோட்டமிட்டான் | கவனித்தான் | உற்று நோக்கினான் | கண்ணோட்டமிட்டான் |
| பார்வையிட்டான் | கண்காணித்தான் | இமை விரித்தான் | ஜாடை காட்டினான் |
| **7. தூங்கினான்** | | | |
| கண்ணயர்ந்தான் | நித்திரையில் ஆழ்ந்தான் | உறங்கினான் | கண்துய்ந்தான் |
| **8. எடுத்துக்கொண்டான்** | | | |
| கவர்ந்தான் | கைப்பற்றினான் | அபகரித்தான் | பறித்தான் |
| பிடுங்கினான் | பெற்றான் | திருடினான் | களவாடினான் |

# விடைத்தாள்

GCE O - LEVEL

தமிழ் வழிகாட்டி புத்தகம்

WORDSMITH
BEYOND LEARNING

## ANSWER SHEET

GCE O - LEVEL

TAMIL GUIDE

## H21. ANSWER KEY

### விடைக்குறிப்புகள்

### பிழைத்திருத்தம் பயிற்சி (E10)

**பயிற்சி** 1

Q1 தன்
Q2 புறக்கணிக்கிறார்கள்
Q3 நடந்து கொள்வதால்
Q4 கொடுத்தாலும்
Q5 அவை

**பயிற்சி** 2

Q1 பங்களிப்பதற்காக
Q2 உலகச்
Q3 விளம்பரங்களும்
Q4 ஒவ்வொரு
Q5 தமிழ்மொழியை

**பயிற்சி** 3

Q1 மேனிக்கு
Q2 நட்பின்
Q3 வெளித்தோற்றத்து
Q4 நிறுத்தி
Q5 அடையாளம்

**பயிற்சி** 4

Q1 வாய்ப்புகளை
Q2 பலரும்
Q3 என்று
Q4 அப்போதுதான்
Q5 பிற்காலத்தில்

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP grades + achieve Big